# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 333/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | ஜெயராணி |
| Husband Name / Father's Name | நடராஜன் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of April 2019.

நான் பெருமாள்நகரில் வசித்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு மூலைக்கரைப்பட்டியில் உள்ள எனது வீட்டில் சுமார் 5 பவுன் மதிப்புள்ள ஒரு செயின் மற்றும் கம்மலை எனது வீட்டில் உள்ள பீரோவில் வைத்திருந்தேன். பின்னர் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்ப வந்து பார்த்தபோது எனது பீரோவில் இருந்த மேற்சொன்ன நகைகளை யாரோ திருடி சென்றுவிட்டனர். பின்னர் இந்த சம்பவம் பற்றி மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு தான் நான் அளித்த புகார். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. பின்னர் சுமார் 6 மாதங்கள் கழித்து யாரோ ஒரு நபரிடமிருந்து திருடிய நகைகளை போலிசார் கைப்பற்றியதாக என்னிடம் கூறினார்கள். பின்னர் இந்நீதிமன்றத்தில் மனு செய்து இந்நீதிமன்றத்திலிருந்து எனது நகைகளை பெற்று சென்று விட்டேன். எனது நகைகளை அடமானம் வைத்துவிட்டதால் இன்று நகைகளை எடுத்து வரவில்லை. அவைகளாவன (1) டாலருடன் கூடிய கோதுமை வடிவ 3 பவுன் தங்க செயின் (2) சிகப்பு கலர் கல் வைத்த கம்மல் ஒரு ஜோடி (1 1/2 பவுன்). காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 333/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | தங்கம் |
| Husband Name / Father's Name | இசக்கிமுத்து தேவர் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of April 2019.

நான் மூலைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

கடந்த 03.08.2013ம் தேதி வழக்கின் சாட்சி ஜெயராணி என்பவரது வீட்டின் பிரோவில் இருந்த சுமார் 5 பவுன் மதிப்புள்ள கம்மல் மற்றும் செயின் தங்க நகைகளை யாரோ திருடி சென்றுவிட்டதாகவும், அதை சாட்சி ஜெயராணி சம்பவம் பற்றி தங்களிடம் கூறியதாகவும் போலிஸ் விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது எதிரியுடன் சேர்ந்து கொண்டு எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 333/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | நயினார் |
| Husband Name / Father's Name | கும்பகோனார் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of April 2019.

நான் மூலைக்கரைப்பட்டி அருகில் முத்துவீரபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. இந்த வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

கடந்த 04.08.2013ம் தேதி 20.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தை மூலைக்கரப்பட்டி காவல்துறையினர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது அதில் தாங்களும், டேவிட் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, தற்போது எதிரியுடன் சேர்ந்து கொண்டு எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.